யதீஸ்வராளின் மஹிமையும் க்ருஹஸ்தனின் கடமையும்

गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः ।
गुरुस्साक्षात्परं ब्रह्म तस्मै श्रीगुरवे नमः ॥

குருவே ப்ரஹ்மா குருவே விஷ்ணு குருவே மஹேச்வரனாகிய தேவன். குருவே ஏகமாகிய பரப்ரஹ்மம். (ஆதலால்) அத்தன்மைய ஸ்ரீகுருவிற்கு நமஸ்காரம்.

जन्तूनां नरजन्म दुर्लभमतः पुंस्त्वं ततो विप्रता
तस्माद्वैदिक धर्ममार्ग परता विद्वत्वमस्मात्परम् ।
आत्मानात्म विवेचनं स्वनुभवः ब्रह्मात्मना संस्थितिः
मुक्तिर्नो शतजन्म कोटि सुकृतैः पुण्यैर्विना लभ्यते ॥

பிராணிகளுள் மனிதராகப் பிறத்தலரிது. மனிதராய்ப் பிறந்தாலும் ஆணாகப் பிறத்தலரிது. ஆணாய்ப் பிறந்தாலும் பிராம்மணனாகப் பிறத்தலரிது. அதினிலும் வைதீகதர்ம மார்க்கத்தில் ஆசையுள்ளவனாக இருத்தலரிது. அதினிலும் வித்வானாகவிருத்தலரிது. வித்வானாகயிருந்தாலும் ஆத்மானாத்ம ஞானத்தோடும் அந்த ஞானத்துக்குத் தக்கபடி அனுபவத்தால் அடையப்பெறும் ப்ரஹ்மஸாக்ஷாத்காரத்தில் மனத்தை நிறுத்திய ஸந்யாஸிகளாகயிருந்து முக்தியையடைதல் அரிதினுமரிது. இது அநேக நூறுகோடி நற்காரியங்களும் புண்ணியங்களுமின்றி சித்திப்பதில்லை என்பதாக ஸ்ரீமத் ஆதி சங்கர பகவத் பூஜய பாதாள் விவேக சூடாமணியில் கூறியிருக்கிறார்கள்.

ब्रह्मचारी सहस्रं च वानप्रस्थ शतानि च ।
ब्राह्मणानां हि कोटयस्तु यतिरेको विशिष्यते ॥

ஆயிரம் ப்ரும்மச்சாரிகள், நூறு வானப்ரஸ்தர்கள், கோடி ப்ராம்மணர்கள் (கிருஹஸ்தர்கள்) இவர்களைவிட ஒரு ஸந்யாஸி ச்ரேஷ்டமானவர். (அத்திரி)

वर्णाश्रमैस्समस्तैश्च परमहंसो द्विजोत्तमः ।

எல்லா வர்ணாச்ரமங்களுள் மேலானது பரமஹம் ஸாச்ரமம். (அத்தரி)

सर्वेषामाश्रमाणां तु संन्यासी ह्युत्तमाश्रमी ।

எல்லா வர்ணாச்ரமங்களுக்குள்ளும் ஸந்யாஸி உத்தமமான ஆச்ரமத்தைச் சார்ந்தவர். (ஹரீதர்)

यतिरूपेण सर्वत्र विष्णुः पर्यटते महीम् ।
भक्तानामनुकम्पार्थं महद्धर्म विवृद्धये ॥

யதி ரூபத்தோடு விஷ்ணுவானவர் எங்கும் சஞ்சரிக்கின்றார். மகத்தான தர்மங்கள் அதிகரிக்கும் பொருட்டு பக்தர்களை இந்த ரூபத்தால் அனுக்ரஹிக்கிறார். (ஸ்கந்தபுராணம் சிவவாக்கியம்)

काषायमात्रधारोपि यतिः पूज्यो युधिष्ठिर ।

காஷாயத்தை மாத்திரம் தரித்தவரானாலும் ஸந்யாஸி பூஜிக்கத் தகுத்தவர் ஹே யுதிஷ்டிர !
(பாகவதம்-ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வாக்கியம்)

द्वे रूपे वासुदेवस्य चलं चाचलमेव च ।
चलं सन्यासिनां रूपं अचलं प्रतिमादिकम् ॥

வாஸுதேவனுக்கு அசைவுற்றது, அசைவற்றது என இரண்டு ரூபங்கள் உண்டு. அசைவுற்றதான ரூபம் ஸந்யாஸி. அசைவற்றதான ரூபம் ப்ரதிமாதிகம்.

(அத்திரி)

काषायं ब्राह्मणस्योक्तं नान्य वर्णस्य कस्यचित् ।

காஷாயத்தை ப்ராம்மணன் ஒருவன் தரிக்கலாம் மற்றவர்களுக்குத் தரிக்க அதிகாரமில்லை.

संन्यास धारणं कार्यं विप्रस्य मुक्तिहेतवे ।

பிராம்மணர்களுடைய முக்தியின் பொருட்டு ஸன்யாஸாச்ரமம் ஆதரிக்கப்படவேண்டிய கார்யமாகிறது.

शिव एव गुरुः साक्षात् गुरुरेवशिवः स्वयम् ।
उभयोरन्तरं किंचिन्न द्रष्टव्यं मुमुक्षुभिः ॥

சிவனே ஸாக்ஷாத் குரு. குருவே தான் சிவன். மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் வித்தியாசம் பாராட்டலாகாது. (சங்கரர்)

तुरीयः परमो हंसः साक्षान्नारायणो यतिः ।

நான்காமவஸ்தையிலுள்ள பரமஹம்ஸர் நாராயணனே

(நாரதபரிவ்ராஜகோபநிஷத்)

यो विप्रो धारयेद्दण्डं सैव नारायणः स्वयं ।

எந்த ப்ராம்மணன் (ஸந்யாசி) தண்டத்தைக் கையில் வகிக்கிருரோ அவர் நாராயணனே.

चतुर्भुजाः प्रजायन्ते दण्ड धारण मात्रतः ।

தண்டத்தைக் கையில் தரித்த மாத்திரத்திலேயே (விஷ்ணுவைப்போல்) நான்கு கைகளையுடையவராகிருர்.

अष्टाक्षरेण मन्त्रेण नमो नारायणात्मना ।
नमस्यो भक्तिभावेन विष्णुरूपी यतीर्यतः ॥

அஷ்டாக்ஷரமாகிய "ஓம் நமோ நாராயணாய" என்னும் மந்த்ரத்தால் எந்த நாராயணன் பக்தி பூர்வகமாய் நமஸ்கரிக்கத்தகுந்தவரோ அந்த விஷ்ணுவின் உருவத்தையுடைய ஸந்யாசி (அதே அஷ்டாக்ஷர மந்த்ரத்தால்) நமஸ்கரிக்கத்தகுந்தவர்.

मौलौ तु सर्वे देवाश्च येषां तिष्ठन्ति निश्चितम् ।
अङ्गुष्ठाग्रे तु विष्णुश्च लक्ष्म्या सह तिष्ठति ॥

சங்கரர் முதல் ஸகல தேவர்களும் இந்த ஸந்யாஸியினிடம் நிச்சயமாக இருக்கின்றார்கள். கட்டைவிரலின் நுனியில் லக்ஷ்மியோடு மகாவிஷ்ணுவும் வசிக்கின்றார்.
(ப்ருகு)

देवताप्रतिमा दृष्ट्वा यतिं दृष्ट्वैक दण्डिनम् ।
नमस्कारमकुर्वाणः नरकं रौरवं व्रजेत् ॥

கடவுளின் பிரதிமையாக விளங்கும் ஏகதண்டத்தை வகித்துக்கொண்டிருக்கிற ஸந்யாஸியைப் பார்த்து நமஸ்கரிக்காதவன் கொடிய நரகத்துக்குப் போகிறான்.
(அத்திரி)

विष्णुलिङ्गाश्रितं विप्रं दृष्ट्वा चैव नराधमः।
स्थिताः शय्यासने याने न त्यजन्ति विमोहिताः ॥
अभ्युत्थानं नमस्कारः प्रसन्नवदनादिकम् ।
कर्मणा मनसा वाचा ये न कुर्वन्ति सत्क्रियाम् ।
सदाचार परिभ्रष्टास्ते पापा यान्त्यधो गतिम् ॥

விஷ்ணுவின் சொரூபத்தை ஆச்ரயித்தவனான ஒரு ஸந்யாஸியைப் பார்த்து, படுக்கை. ஆஸனம், வாஹனம், இவைகளை விட்டுவந்து எதிர் நிற்காமலும், நமஸ்கரிக்காமலும், மனதாலும். வார்த்தையாலும் செய்கையாலும் ஸத்காரம் செய்யாமலும் இருக்கிற மமதையுடைய அதமன் நல்லொழுக்கத்தினின்றும் தவறியவனாய் பாபத்தை அடைந்து அதோகதியாக நரகத்திற்குப் போகிறான். (அத்திரி.)

यत्र कुत्रापि यतिनं दृष्ट्वा यो दण्डवत् भुवि ।
न नमोदिति कायेन कल्पान्तरे रौरवादय: ॥

ஸந்யாஸி எந்த இடத்திலிருந்து பார்க்கப்பட்டாலும் ஒரு தடி கீழே விழுவதுபோல் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரிக்காதவன் மீளாத நரகத்தை அடைகின்றான். (ஹரீதர்.)

आसनं शयनं यानं दृष्ट्वा न यस्त्यजेत् ।
स मृतोपि हि दुष्टात्मा श्वयोनावेव जायते ॥

ஆசனம், படுக்கை, வண்டி இவைகளை ஒரு ஸந்யாஸியைப் பார்த்தவுடன் விட்டுவிடவேண்டும். அப்படி விடாத துஷ்டாத்மாவானவன் இறந்ததும் நாயாகப் பிறக்கிறான். (ஜாபாலர்)

दुर्वृत्ते वा सुवृत्ते वा यतौ निन्दा न कारयेत् ।
यतीन्वै दूषमाणस्तु नरकं याति दारुणम् ॥

ஸந்யாஸி கெட்ட நடத்தையோடு கூடினவனோ, நல்ல நடத்தையோடு கூடினவனோ, தூஷிக்கப்படக்கூடாது. ஸந்யாஸியை நிந்திப்பவன் கொடிய நரகத்தையடைகிறான். (ஜாபாலர்

अविद्यो वा सविद्यो वा मूर्खः पण्डित एव वा ।
प्रेषमात्रेण संन्यासी पूज्यः सर्वेश्वरो यथा ॥

படிப்பில்லாதவனுகவோ, படித்தவனுகவோ அல்லது மூர்க்கனுகவோ, பண்டிதனுகவோ, அல்லது ப்ரேஷமாத்திரத்தில் ஸந்யாஸியாகயிருந்த போதிலும் அவர் ஸர்வேச்வரனுக பூஜிக்கத்தகுந்தவர்.

निर्वासनो निरालम्बः स्वच्छन्दो मुक्तबन्धनः ।
क्षिप्तः संस्कारवातेन चेष्टते शुष्कपर्णवत् ॥

பந்தத்திலிருந்து விடுபட்டவனை ஞானி இருப்பிட மற்றவராய் சுதந்திரராய் கலக்கமற்றவராய் ப்ராப்தமாகிற காற்றினல் அங்குமிங்கும் எறியப்படும் உலர்ந்த இலையைப்போல் (கண்ட இடத்தில் கண்டபடி) சஞ்சரிக்கின்ருர். (அஷ்டாவக்ர கீதை)

यतिमागतं स्वगतमित्युक्त्वाभ्युत्थायासनं पादशौचमभ्यञ्जनं च दत्वा कुशलमभि भोष्योपासीत । काले त्वन्नं भैक्षमुपाहरेत्स तस्योपचार इति ॥ (बोधायनः)

ஸந்யாஸி வந்தவுடன், வரவேண்டும் "நல்வரவு" என்று கூறிக்கொண்டு எழுந்திருந்து, முன் சென்று ஆஸநம், பாத ப்ரக்ஷாளனம் (கால் அலம்புதல்) அப்யஞ்ஜனம் (ஸ்னனகல்பம்) முதலியவைகளால் ஸத்கரித்து, சௌக்யங்களை வினவி, காலத்தில் நல்ல பிக்ஷையையும் செய்வித்து உபசரித்தல் வேண்டும்.

यते दर्शन मात्रेण तथा पापक्षयो भवेत् ।
गीतायाः श्लोकमात्रेण यथा नश्यन्ति पातकाः ॥

கீதையின் ஒரு ச்லோகத்தைப் படித்தால் மாத்திரம் அநேக பாபங்கள் நாசமாவது போல, யதி (ஸந்யாஸி) யின் தர்சன மாத்திரத்தால் பாபங்கள் நாசமாகின்றன.

பிதாவாகவும், ஜேஷ்டர்களாகவும், வயோதிகர்களாகவும். அதிகமாகக் கற்றவர்களாகவும் இருந்த போதிலும் ஸந்யாஸியை நமஸ்கரிப்பது முறை. இது தவறினல் தோஷம். (விலக்கு-ஸந்யாஸியின் மாத்யான்னிகம் முடிந்து, பிக்ஷை முடியும் வரை நமஸ்கரிப்பதும், கிரஹஸ்தன் க்ஷவரம் செய்து கொண்ட தினத்தில் ஸந்யாஸியை தர்சிப்பதும் கூடாது.)

त्वमेव देवदेवेश त्वमेव त्राणकारकः ।
त्वमेव जगतां वन्द्यः त्राहि मां शरणागतम् ॥

நீரே தேவர்களுக்கெல்லாம் ச்ரேஷ்டரான தேவர், நீரே என்னைக் காப்பாற்றுகிறவர், உம்மையே உலகம் வணங்குகிறது. நான் உம்மைச் சரணகதியாக அடைகின்றேன். இரக்ஷிக்கவேண்டும் என்று கூறுவதும்
(நிர்வாண தந்திரம்.)

अष्टाक्षरेण मन्त्रेण नमो नारायणात्मना ।

"ஓம் நமோ நாராயணுய" என்றும் மற்றும் பல வகையான மந்த்ரங்களை உச்சரிப்பதும் கடமை. அதாவது இச்சந்யாஸியை மனிதன் என்று நினைக்காது பக்தியுடன் நாராயணன் என்றே மதித்து ஒழுகுதல் வேண்டும்.

ஒரு கிராமத்தில் அல்லது அதையடுத்துள்ள வனத்தில் ஒரு ஸந்யாஸி வந்திருக்கிருர் என்று எவனுக்குத் தெரிந்தபோதிலும், அவன் இவரை உப

சரித்து, வந்தன வழிபாடுகள் செய்து, இவரது நல்வரவை ஊரில் பரவச் செய்யவேண்டும். பலரும் இவரை அக்காலத்திய மதுரமான பழங்களையும் பத்திர புஷ்பாதிகளையும் தேங்காயையும் எடுத்துக்கொண்டு சென்று, தர்சித்து, பிக்ஷைக்கு வேண்டிய ஏற்பாடுகளை நடத்திவைக்க வேண்டும், இம் முறையைப் பின் பற்று மிடத்து அக்கிராமத்தினின்றும் துர்பிக்ஷம் நீங்கி நல்ல படி வாழ்வார்கள். இவரை அரசன் போல் கிராமத்துள் அழைத்துவரவேண்டும்.

यथा राजा जनैः सर्वैः पूज्यते मुनिसत्तम ।
तथा ज्ञानी सदा देवैः मुनिभिः पूज्य एव हि ॥

அரசன் எவ்விதம் எல்லா பிரஜைகளாலும் பூஜிக்கப்படுகின்ருனோ, அதுபோல ஞானியாகிற ஸந்யாஸி தேவர்களாலும் முனிவர்களாலும் பூஜிக்கத்தகுந்தவர். (ஸூதஸம்ஹிதை)

यदैव च गृहस्थस्य निराशो भिक्षुको गतः ।
हुतं दत्तं तपोधीतं सर्वमादाय गच्छति ॥

எந்த கிரஹஸ்தனுடய வீட்டிற்குச் சென்று நிராசையாய் ஒரு ஸந்யாஸி திரும்புகிருரோ, அந்த கிரஹஸ்தனுடய அக்னிஹோத்ரம் ஔபாஸனம், தானம், தபஸ் அத்யயனம் இன்னும் மற்ற எல்லாவற்றினுடய புண்ணியங்களையும் அந்த ஸந்யாஸி அபகரித்துக்கெண்டு போய்விடுகிருர். ஆதலால் ஸந்யாஸியை உபசரிக்காமல் நிராசையாய்ப்போக விடுவது தோஷமாகும்.

சாஸ்திரப்படி, க்ருஹஸ்தர்கள் தினப்படி தயாரிக்கும் ஆஹாரத்தில் யதிகளுக்கும் ஒரு பாகமுண்டு. யதி

கள் வாராததால் இந்த யதிகளின் பாகம் க்ரஹஸ்தர் களுக்கே உபயோகப்படுகிறது. ஆகையால் அநேக மாதங்கள் அல்லது அநேக வருஷங்களுக்கு ஒரு தடவை வந்த யதிகளை ஸத்கரிப்பது க்ரஹஸ்தர் களின் கடமையாகும்.

யதி பூஜை.

ஸாக்ஷாத் விஷ்ணு தேவாலயங்களில் நிறைவேற் றும் விதமே யதியின் கட்டைவிரலுக்காவது அவருடய பாதுகைக்காவது புருஷஸூக்தம் கூறி அபிஷேகமும் மற்றும் த்வாதச நாமம், அஷ்டோத்தரம், ஸஹஸ்ர நாமம் முதலிய அர்ச்சனைகள் செய்வதும் பல இடங் களில் பல பக்தர்களால் செய்விக்கப்படுகிறதும் வழக்கம்.

यतीनां पादयोः सम्यग् विष्णुसूक्तेन सिञ्चति ।
ते नरा विष्णुसायुज्यं प्राप्नुवन्ति न संशयः ॥

யதியின் பாதங்களில் எவன் விஷ்ணு ஸூக்தத் தால் அபிஷேகம் செய்விக்கிருனே, அவன் சந்தேக மின்றி விஷ்ணு ஸாயுஜ்யத்தை அடைகின்ருன்.

பிக்ஷா நிஷேதங்கள்.

தகப்பன் இறந்தபின் ஒரு வருஷம், தாய் இறந்த பின் ஆறு மாதம், மகன் இறந்தபின் ஆறு மாதம், மனைவி இறந்தபின் மூன்றுமாதம், ஸபிண்ட தாயாதி ஒரு மாதம், குமாரன் பிறந்தபின் ஒரு மாதம், குமாரத்தி பிறந்தபின் 40 நாட்கள், எருமை, பசு, நாய், பூனை, குதிரை இவைகள் ஈன்ற பின் 10 நாட்கள் வரையில் அந்த க்ருஹத்தில் பிக்ஷை நிஷேதம்.

க்ருஹஸ்தர்கள் காலை 8 மணிக்குள் பிக்ஷாவந்தனம் செய்து கொள்ளவேண்டும்.

யதிக்கு இலை போடும் இடத்தை கோமயத்தால் சுத்தி செய்து, உட்காரும் ஆஸனப்பலகைக்குக் கீழும் முன்னிலையிலும் கோலம் முதலியது போட்டு அலங்கரித்து தீபம் தூபம் (ஊதுவர்த்தி) முதலியதை ஏற்றி வைத்து அவரை அழைத்து உட்காரவைத்து, இலை போடுமிடத்தில் நான்கு மூலையாக ஸ்தல சுத்தி செய்ய வேண்டும்.

யதியின் பிக்ஷை முடிந்த பிறகு கிரஹத்திலுள்ளவர்களெல்லோரும் அதிக ச்ரத்தையோடு நான்கு தரம் நமஸகரித்து அவருடைய இருப்பிடத்துக்கு அழைத்துச் சென்று, பின்னர் திரும்பி வந்து போஜனம் செய்வது முறை. மேலே சொன்னபடி நமஸ்கரிக்கும்போது அவருக்கு வேண்டியதான ஆஸனம், கௌபீனம், வஸ்த்ரம், மற்றும் அவசியமானவைகளையும் கொடுத்தனுப்புவது வழக்கம்.

அபசாரங்கள்.

नाम गोत्रादि चरणं तथा कालं श्रुतं कुलम् ।
वयो वृत्तं च शीलं च ख्यापयन्नैव सद्यतिः ॥

பெயர், கோத்திரம், சந்ததி, தேசம், காலம், படிப்பு, குலம், வயது, நடத்தை, வ்ரதம், சீலம் இவைகளைப் பற்றி சம்பாஷிக்கலாகாது.

மனோ வாக்கு காயங்களால் ஏதாவது அபசாரமாக நடந்துகொள்ள நேர்ந்தால் உண்டாகும் தோஷங்கள் பல.

अपमाने कृते देवास्सर्वेचाप्यपमानिता: ।

இவர்களை அவமதிப்பதால், ஸகல தேவதைகளும் அவமதிக்கப்படுகின்றூர்கள்.

सर्वेषां अपराधानां यतिनिन्दा गरीयसी ।
यतिनारायणस्साक्षात् तस्मात्तां परिवर्जयेत् ॥

குற்றங்களுக்குள் ஸந்யாஸியை நிந்திப்பதாகிய குற்றம் மிகவும் வலியது. ஸ்ரீமந் நாராயணனுடைய உருவமே யதி என்பதாலும், அன்னவரை தூஷிப்பதாகிய குற்றம் மிகக் கொடியதாதலாலும் (இக் குற்றத்திற்குப் ப்ராயச்சித்தம்கிடையாது) யதிதூஷணையை விலக்க வேண்டியது.

कर्मणा मनसा वाचा ये न कुर्वन्ति सत्क्रियाम् ।
सदाचारपरिभ्रष्टास्ते पापा यान्त्यधोगतिम् ॥

மனோ வாக்கு காயங்களால் யதியை ஸத்கரிக்காதவர் ஒழுங்கீனர்கள். தாங்கள் செய்யும் இந்த பாபத்தால் அதோகதியை அடைகிறூர்கள் (அத்திரி).

शम प्रधानेषु तपोधनेषु गूढं हि दाहात्मकमस्ति तेज:

சாந்தத்தையே பிரதானமாக உடைய தபோதனர்களான யதிகளிடத்தில் எதையும் எரிக்கவல்ல தபோசக்தி மறைந்திருக்கிறது. இதை உணர்ந்து அவர்களுடைய சினத்துக்கு ஆளாகாமல் வாழ்வதே அறிவுடையார் தன்மையாகும். (காளிதாஸர்).

ஸந்யாஸி குரு

துறவறம் பூண்ட ஒரு மனிதனை நமது வேதாகம சாஸ்த்ரங்கள் குருவாகக் கூறுகின்றன.

कर्मभिरेव न बोधः प्रभवति गुरुणा विना दयानिधिना ।
आचार्यवान् हि पुरुषो वेदेत्यर्थस्य वेदसिद्धित्वात् ॥

கிருபாநிதியான குருவின்றி கர்மத்தால் மாத்திரம் ஞானம் உண்டாகாது. குருவை அடைந்தவனுக்கே ஆத்மஞானம் உண்டு என்பது வேதத்தின் கொள்கை.

शिवे रुष्टे गुरुस्त्राता गुरौ रुष्टे न कश्चन ।

சிவன் கோபித்த காலத்து குரு ரக்ஷிப்பவராகின்ருர். குரு கோபித்தகாலத்து (சிவன் உள்பட) இரக்ஷிப்பவர் ஒருவருமில்லை

ஸந்யாஸிகளுடைய பெருமையைப்பற்றி எவ்வளவு தான் கூறினும் அது சிற்றளவேயாகும். ஸநாதன தர்மத்தைச் சார்ந்த ஒவ்வொருவனும் இவர்களைப் பற்றிச் சிறிதேனும் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும்.

''துறந்தார் பெருமை துணைக்கூறின்—வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண்டற்று''

(திருக்குறள்)

ஸந்யாஸியின் மஹிமையை கணக்கிட்டுச் சொல்லப் புகுவது, இந்த உலகத்தில் இறந்த ஜனங்களைக் கணக்கிடுவதற்கு ஒப்பாகும் (அதாவது அளவிட முடியாது).

உலகத்தின் லௌகீகக்கல்விகளெல்லாம் இவர்களுக்கு அவித்யையேயாகும். இவர்களுடைய நடத்தை மூர்க்கரையும் பித்தரையும் பிசாசு பிடித்தவரையும் ஒத்தது. இவர்களிடம் நிலைத்திருப்பது ஞானம்.

வெளிக்காரியங்களில் இவர்கள் தமது கருத்தைச் செலுத்தார். இரண்டற்றதான ப்ரஹ்மத்தை த்யானித்தவர்களாய் இவர்கள் குழந்தைகளைப் போலவும் பித்தர்களைப்போலவும் சஞ்சரிப்பதுண்டு. இவர்களுடைய எண்ணம் ஒரே வஸ்துவில் நிலைத்திருப்பதால், ஆஹார விவகார விஷயங்களில் கவலையற்றிருப்பார்கள். சென்றதை எண்ணுர். வருவதைக் கருதார்.

ஆதலால் ஆசரணையை மாத்திரம் பொருட்படுத்தும் க்ருஹஸ்தன் மோசம் போகலாகாது என்பதை உத்தேசித்தே ஆழ்ந்த கருத்துடன் மேற்கூறிய ச்லோகங்கள் வரையப்பட்டன என்பதையும், இவர்களைப் பூஜித்து நல்ல அனுக்ரஹகத்தைப் பெறவேண்டும் என்பதையும் க்ருஹஸ்தர்கள் நன்ருய் உணரவேண்டும்.

பூஜிக்கத்தகாதவர்களைப் பூஜிப்பதால் தீங்கொன்றும் இல்லை. பூஜிக்கத்தகுந்தவர்களைப் பூஜிக்காவிட்டால் தோஷங்கள் சம்பவிக்குமன்ருே?

நற்கதியை நாடும் கிரஹஸ்தன் ஒவ்வொருவனும் எவ்வளவு படித்தவனுகவும் மேற்பதவியிலிருந்த போதிலும், தன் பொருட்டும் தனது குலத்தின் பொருட்டும் ஸந்யாஸிகளை அவமதிக்கவுமாகாது. தூஷிக்கவுமாகாது. இவர்களுடைய பூர்வ ஜன்ம ஸம்ஸகார பலம் வலியது.

"அருமையுடைய அரண் சேர்ந்தும்—உய்யார்
பெருமையுடையார் செறின்'' (நாலடியார்)

நாற்புறமும் மதில்களால் சூழப்பட்ட அரண்மனை யில் வசித்து வந்தாலும் ஸந்யாஸி கோபித்துக் கொண் டால் பிழைப்பதரிதாகும்.

ஸந்யாஸியை ஸத்கரிக்காததால் வரும் தோஷங் களை எடுத்துக் கூறுவதிலும் கூட, மனமும் கையும நடுககமுறுவதால், இது இத்துடன் நிறுத்தப்படுகிறது.

ஆச்ரமம்.

ஸந்யாஸிகளுடைய தள்ளாத காலத்தில் அவர்கள் வசிப்பதற்காக சகல ஸௌகர்யங்களோடு ஆச்ரமம் அல்லது மடம் கட்டுவித்து, அவரது சேவைக்காக நல்ல ஏற்பாடுகள் தேடி வைப்பதின் பலனை எடுத்துரைக்க இச்சிறு புத்தகம் இடந்தராது. ஸர்வாபீஷ்டமும் கை கூடுமென்று சுருக்கமாகக் கூறி முடிப்போம்.

धनानि गेहे पशवश्च गोष्ठे भार्या गृहद्वारि जनः श्मशाने ।
देहश्चितायां परलोकमार्गे धर्मानुगो गच्छति जीव एकः ॥

வயது முடிவில் தன தான்யாதிகள் க்ரஹத்திலும், பசு சாலையிலும், மனைவி வீட்டு வாசலிலும், பந்துக்கள் ஸ்மசானம் வரையிலும் நின்று விடுகின்றார்கள். தேஹம் கட்டையால் சாம்பலாக்கப்படுகிறது. தான் செய்யும் தர்மா தர்மங்களோடு மாத்திரம் ஜீவன் பரலோக மார்க்கத்தில் தனித்துச் செல்லுகிறது.

ஆகையால் தர்மத்தைக் காலங்கடத்தாது உடனே செய்தல்வேண்டும். நன்றே செயல் வேண்டும்! — அதுவும் இன்றே செயல் வேண்டும்!!

——

முடிவுரை

வேத காலம் முதல் ஏற்பட்டதாயும், வேதங்களில் கூறியதாயுமுள்ளது நமது ஸநாதன தர்மம். வேதம் தெய்வப்ரணீதமாதலால் அதில் கூறியுள்ளவைகள் சாச்வதமான தத்வங்கள். இத்தத்வங்களை நாம் அனுஷ்டிக்குமிடத்து அவைகள் நமக்குக் குறைவில்லாத நன்மைகளைத் தருவனவாகும். ஸநாதன தர்மத்தினுடைய அனுஷ்டானங்கள் தற்காலத்தில் நம் ஹிந்து சமூகத்தில் தினேதினே ரொம்ப க்ஷீண தசையை யடைந்து வருகின்றன என்பது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த விஷயமே ஸந்யாஸிகள் மிகச் சுருங்கியிருக்கிறார்கள். க்ருஹஸ்தர்கள் ஸந்யாஸிகளிடம் ஒழுக வேண்டிய கிரமம் தெரிந்து கொள்ள ஹேதுவில்லாததால், க்ருஹஸ்தர்கள் இவர்களால் அடையக்கூடியதான நன்மைகள் மிகுதியும் குறைந்திருத்தலுமின்றி, தீமையே இதற்குப் பிரதியுண்டாகி வருவதால், பெரும்பாலரான க்ருஹஸ்தர்களைப் பற்றிய வரையில் மிகவும் முக்யமானபாகத்தை இச்சிறு புஸ்தகத்தில் (ச்லோகார்த்த ரூபமாய்) சுருக்கமாய் எடுத்துக்காட்டினோம்.

இக்காலத்தில் அநேக அக்ரஹாரங்களுக்கு ஒரு யதிகள் விஜயம் செய்யும் போது பெரும்பாலராயுள்ள க்ருஹஸ்தர்கள், தங்களுக்கும் யதிகளுக்கும் எந்த விதத்திலும் யாதொரு சம்பந்தமுமில்லை போலும்; வேண்டாவெறுப்பாக இருப்பது போலவும் நடத்தையில் காட்டி. யதிகளை பஹிஷ்காரம் செய்கின்றார்கள். சாஸ்த்ரம் படித்தவர்களும், சிஷ்டாச்சாரமுள்ளவர்கள் போல் காணப்படுபவர்களும், வேதங்களுடைய ஸாரத்தையும், யதிகளை ஸத்கரிக்கவேண்டியது தங்களுடைய கடமை என்பதையும் நன்றாய் தெரிந்து கொண்டவர்களில் அநேகரும், தங்களுடைய அக்ரஹாரத்துக்கு

ஒரு யதிகள் விஜயம் செய்திருக்கின்றூர்கள் என்று தெரிந்தும் கூட, இவர்கள் சந்யாஸிகளே அலக்ஷியமாய் பஹிஷ்காரமே செய்கின்றூர்கள். இது இக்காலத்தில் ரொம்ப ஸஹஜமாயிருந்து வருகின்றது. நம்முடைய சஞ்சாரத்தில் நாம் இவ்விதமாய் அனுபவித்து வருவதை எழுதினேம். இவர்கள் தெரிந்தே பாபத்தைச் செய்வதால் இப்புஸ்தகத்தால் இவர்களுக்கு யாதொரு நன்மையும் உண்டாகாது. ஆனல் அநேக ஜனங்கள் தங்களுக்கு விஷயங்கள் தெரியாவிடினும், பூர்வ ஜன்ம புண்ணிய விசேஷத்தால் பக்தியுள்ளவர்களாக இருக்கின்றூர்கள். இவர்களுக்கு இப்புஸ்தகம் கண் திறக்கும் ஓர் கருவியாகும். கீதா சாஸ்த்ரத்தில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா ஸந்யாஸிகளுடைய யோக க்ஷேமத்தைத் தாங்களே நேரில் நடத்துவதாகச் சொல்லுவதால், தர்மங்கள் லோபத்தையடைந்திருக்கும் இக்காலத்தில் கூட யதிகளுக்கு ஒரு குறைவுமில்லாமலேயே பரிபூர்ணமாய் நடந்து வருகின்றன. இருந்தபோதிலும் ஸந்யாஸிகளேப் பற்றி ஒன்றுமே தெரியாமலிருந்து வரும் தமிழ் நாட்டிலுள்ள ஆஸ்திக புத்தியுள்ள ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு யதி ஸத்காரம் செய்து பரம ச்ரேயஸ்ஸை அடைவதற்கு இச்சிறு புஸ்தகம் ஓர் ஊன்றுகோல் போல் உதவும் என்பதில் சந்தேகமில்லை.

நாராயணஸ்மிருதி:

ப்ரணவ ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள்.

॥ इति श्री गुरुभ्यो नमः ॥

॥ ओं तत्सत् ॥